1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 236, திரு ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

236-

வள்ளுவர் கோட்டத்தைப் பழுதுபார்த்தல்

***14596-திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னையில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தினைப் பழுது பார்க்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வள்ளுவர் கோட்டத்தைப் பழுதுபார்க்க, ரூ. 26.61 லட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வள்ளுவர் கோட்டத்தை அழகுபடுத்தவும், மேம்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுப்படி, ரூ. 6.12 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழுதுபார்க்கும் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டம், மேல்மாடம் இல்லாமல் பார்ப்பதற்குக் குட்டையாகவும், மொட்டையாகவும், யாரையோ நினைவுப்படுத்துவதைப் போல, கலையம்சமே இல்லாமல் உள்ளது. இதனைப் போக்கும் வகையில், குளுகுளு வசதியுடன் மேல் மாடம் ஒன்றை உருவாக்குவதோடு, அதனை, கைராசியும், முகராசியும் உள்ள நமது இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்துவைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டம், 1976--ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவிலே, அந்த

வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. என்ன காரணத்தினாலோ, அது ஒரு கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்டு இருந்தாலும், 18 வருட காலத்திலே, இன்றைக்கு பழுதாகி, மிகவும் மோசமான நிலையில் இருப்பதைச் சீர் செய்வதற்கு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், 26 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது, வள்ளுவர் கோட்டத்தைச் சீர்செய்து பொலிவுடன் மிளிரச் செய்வதற்கு, ரூ. 6.12 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அங்கே ஏற்பட்டிருக்கிற-18 வருட காலத்திலே ஏற்பட்டிருக்கிற--விரிசல், வெடிப்பு மற்றும் கல் தூண்களிலே தொங்கவிடப்பட்டுள்ள தொம்பைகளைப் புதுப்பித்தல் போன்ற அனைத்துப் பணிகளும், வண்ணப் பூச்சுப் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த அனைத்து வேலைகளும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும். மேலும், வள்ளுவர் கோட்டத்தில், மேல்மாடத்தில், கட்டிடம் கட்டப்படுமா என்று உறுப்பினர் அவர்கள், இங்கே கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே, வள்ளுவரைப் பெருமைப்படுத்தும் வகையிலே, கன்னியாகுமரியிலே, 133 அடி உயரத்திலே திருவள்ளுவர் சிலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த எண்ணம், அரசின் பரிசீலனையில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ்கொண்டது", நம்முடைய தமிழ்நாடு. வள்ளுவனுக்காக எடுக்கப்பட்ட இந்தக் கோட்டத்தில், 18 ஆண்டுகளிலே சில விரிசல்களும், வெடிப்புகளும் எழுந்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். 26 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 6 இலட்சம் ரூபாய்தான் இப்பொழுது செலவிடப்படுகிறதாக அறிவித்திருக்கிறார்கள். இப்பொழுது வண்ணம் இழந்து, பொலிவிழந்து இருக்கக்கூடிய அந்த வள்ளுவர் கோட்டத்திற்கு 26 இலட்சம் போதாது. இன்னும் கூடுதலாக நிதியை ஒதுக்கி, ஒரு கோடி ரூபாய் அளவிலே ஒதுக்கி, அதை அழகுபடுத்தி, பழுது பார்த்து, குறளை பாடிப்பாடி இப்பொழுது மறைந்திருக்கிற பெரியவர் திருக்குறள் முனுசாமிக்கு அந்த இடத்திலே சிலை எழுப்ப அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 8]

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26 இலட்சத்தில் ஏற்கெனவே 7 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது மேலும் 6 இலட்சம் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்ட அந்த வள்ளுவர் கோட்டத்திற்கு நான்கில் ஒரு பங்கு, 26 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். வள்ளுவர் கோட்டத்திலே திருக்குறள் முனுசாமி சிலை வைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். அது வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் கோட்டத்திலே வள்ளுவர் சிலைதான் இருக்க வேண்டும். கண் இல்லாதவர்களுக்கு கண்ணாயிரம்**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தனிப்பட்ட முறையில் உறுப்பினரைப் பாதிக்கும் குறிப்பு ஆகும். அது அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: எப்பொழுதுமே மாண்புமிகு உறுப்பினர் திசை திருப்புவதில் கெட்டிக்காரர். ஆகவே, வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர் சிலைதான் வைக்க வேண்டும். வேறு எந்தச் சிலையும் அங்கே வைக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 237, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

237--

ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

20717-திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS